செ.வெ.எண்.73 நாள்.21.07.2017.

**திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 11 விவசாயிகளுக்கு மண்வள அட்டைகளையும், இரண்டு நபர்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறை தற்காலிக பணிநியமன உத்தரவினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.**

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (21.07.2017) நடைபெற்றது. கூட்டத்தில், வேளாண்மைத் துறையின் மூலம் பாளையங்கோட்டை வட்டத்தைச் சார்ந்த 11 விவசாயிகளுக்கு மண்வள அட்டைகளையும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் தற்காலிக கால்நடை மருத்துவர் பணியிடம் ஒருவருக்கும், தற்காலிக கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணியிடம் ஒருவருக்கும் என இரு நபர்களுக்கு பணிநியமன உத்தரவினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் கடந்த ஜூன் மாதத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட 311 மனுக்களில் வேளாண்மையைச் சார்ந்த 166 மனுக்கள் மற்றும் வேளாண்மை சாராத 145 மனுக்களுக்கும் பதில்கள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். மேலும், விவசாயிகளின் கோரிக்கைகளின் மீது அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொண்டு தீர்வு காண வேண்டுமென் உத்தரவிட்டார்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.கனகராஜ், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மரு.ராஜேந்திரன், உள்பட அனைத்து துறை அலுவலர்கள், விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.